எனது தலைமையிலான தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகளின்மூலம், மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி இணைப்பைத் தமிழக மக்கள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடு) இல்லை, இல்லை, டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள், please sit down. பிறகு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்த பின்னர், தாங்கள் அனுமதி அளித்தால், ஒரு அரசினர் சிறப்புத் தீர்மானத்தை இன்று கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,